ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2158/5 - 2020 ජනවාරි මස 13 වැනි සඳුදා - 2020.01.13
2158/5 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 (5) ஆம் உறுப்புரைக்கு அமைய மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அசைச்சில், மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் பணிகள் இந்த அறிவித்தலின் திகதி முதல் இதனகத்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறாக இருத்தல் வேண்டும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

சட்டத்தரணி பவித்ரா வன்னிஆரச்சி,
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக, பாதுகாப்பு
அமைச்சர்.

2020, சனவரி 09.

**அட்டவணை**

***மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்***

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| கடமைகளும் பணிகளும் | திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும் | நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள் |
| 1. உடல், உள ரீதியான ஆரோக்கியமுள்ள பிள்ளைகளை உருவாக்கும் நோக்குடன் முன் சிறுவர் பராய பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான கொள்கைகளையும் நிகழ்ச்சித் திட்டங்களையும் | 1. நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம். | • (1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க) தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம். |


இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| வகுத்தமைத்தலும், பிரதேச, மாவட்ட மற்றும் மாகாண மட்டக் குழுக்களுடன் அத்தகைய நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும், தொடர் பிணைத்தலும் மற்றும் தொடராய்வும். | 2. தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை. | • (1941 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க) சிறுவர் மகவேற்புக் கட்டளைச் சட்டம். |
| 2. சிறுவர் துன்புறுத்தலைத் தவிர்ப்பதற்காக சட்டங்களையும் கொள்கைகளையும் வலுப்படுத்தலும் செயற்படுத்தலும். | 3. சிறுவர் செயலகம். | • (1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க) சிறுவர், இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம். |
| 3. சிறுவர் நடவடிக்கைகளுக்குரிய நீடுறுதியான அபிவிருத்தி அபிலாசைகளை நிறைவேற்றல். | 4. சிறுவர்களைப் பாதுகாப்போம் நிதியம். | |
| 4. பாதுகாப்பற்ற நிலையிலுள்ள சிறுவர்களின் உரிமைகளை தேசிய கொள்கைகள் மற்றும் சர்வதேச நியமங்களுக்கு இயையானவாறு உயர்ந்த மட்டத்தில் வைத்துப் பேணுவதுடன், அத்தகைய சிறுவர்களுக்கு சமவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும். | | |
| 5. சிறுவர் பட்டயத்தை நடைமுறைப்படுத்துதல். | | |
| 6. சிறுவர் பாதுகாப்புப் பராமரிப்பு நிலையத்தின் ஒழுங்குறுத்துகை. | | |
| 7. செவண சரண ஆதரிப்பு பெற்றோர் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல். | | |
| 8. விசேட திறமைகளுடைய சிறுவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான நிதி உதவியினை வழங்குதல். | | |

***சமூகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்***

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *கடமைகளும் பணிகளும்* | *திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. விசேட தேவையுடையவர்களின் இயலாமை நிலைமைகளை முற்கூட்டியே இனங்காணல் மற்றும் புனர்வாழ்வளித்தல். | 1. கிராம அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம். | • (1996 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க) சமூக பாதுகாப்புச் சபைகள். |
| 2. மக்கள் உதவித் தொகைத் திட்டங்களை மீளாய்வு செய்தலும் மீள் ஏற்பாடு செய்தலும் தகுந்த சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்தலும். | 2. சமூக சேவைகள் திணைக்களம். | • (1907 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க) தடுப்பு இல்லங்கள் கட்டளைச் சட்டம். |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

***சமூகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்*** *(தொடர்ச்சி)*

*நிரல் I*

*கடமைகளும் பணிகளும்*

3. சயரோகம், சிறுநீரக நோய், தொழுநோய், புற்றுநோய், தெலிசீமியா போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களில் தங்கி வாழ்வோருக்கும் உதவித் தொகைகளை வழங்குதல்.

4. குடும்ப ஆலோசனைச் சேவைகளை நடைமுறைப்படுத்தல்.

5. வலதுகுறைந்த நபர்கள் தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படும் சமவாயங்களுக்குரிய அலுவல்கள்.

6. வலதுகுறைந்த ஆட்களுக்கு வாழ்க்கைத் தொழில் பயிற்சியளித்தலும், வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காகத் தேவையான உபாயமுறைகளைத் திட்டமிடுதலும்.

7. வலதுகுறைந்த நபர்கள் பிரதான மக்கள் சமூகத்துடன் சேர்ந்து செயற்படக்கூடியதாக தேவையான கொள்கை ரீதியான மாற்றங்களைத் தகுந்த முறையில் மேற்கொள்ளவும் அவற்றைச் செயற்படுத்தத் தேவையான நிகழ்ச்சித்திட்டங்களைளைத் தயாரித்துத் தொடங்குதலும்.

8. வலதுகுறைந்த ஆட்களுக்கான சமூகக் காப்புறுதித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.

9. வயதுமுதிர்ந்த ஆட்களின் நலக் கவனிப்பும் சமூக அபிவிருத்திப் பணிகளில் முதியோரின் பங்களிப்பை அதிகரிக்கச் செய்தலும் சிரேட்ட பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும்.

*நிரல் II*

*திணைக்களங்களும் அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சட்ட நிறுவனங்களும்*

3. வயது முதிர்ந்த ஆட்களுக்கான தேசிய மன்றமும் தேசிய வயது முதிர்ந்தோர் செயலகமும்.

4. வலதுகுறைந்த ஆட்களுக்கான தேசிய பொதுச் செயலகம்.

5. வலதுகுறைந்த ஆட்களுக்கான தேசிய மன்றம்.

6. சமூகப் பாதுகாப்புச் சபை.

*நிரல் III*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

- (2000 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) முதியோர் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்.
- (1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க) வலுவிழந்த ஆட்களின் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம்.
- (1841 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க) அலைந்து திரிவோர் கட்டளைச் சட்டம்.
- (1992 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க) கட்புலன் இழந்தோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியச்சட்டம்.

2-652

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.